ආයතනයේ නම : තැපැල් දෙපාර්තමේන්තුව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද
වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු
අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

நிறுவனத்தின் பெயர் : தபால் திணைக்களம்

பாராளுமன்ற அரசாங்க கணக்குக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை
தொடர்பில் நிலையியற் கட்டளை இலக்கம் 119 (4) கீழ்
கௌரவ அமைச்சரின் அவதானிப்பு மற்றும் எடுக்கப்பட்ட
நடவடிக்கைகள் பாராளுமன்றத்திற்கு முன்வைத்தல்.

Name of the Institution : Department of Post

Submission of observations of Hon Minister and Steps Taken with Regard To the Reports Tabled by The Committee on Public Account in Terms of Standing Ordrer No 119(4)

மாதிரிப் படிவம் (இலக்கம் 01)
பாராளுமன்ற வெளியீடு தொடர் எண் –183
நிறுவனம் –தபால் திணைக்களம்

முதற் பகுதி : 82.00		
தொடர். இலக்கம்	**குழுவினால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்**	**குறைபாடுகளை சரிசெய்வதற்கு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள்மற்றும் தற்போதைய நிலை**
01.	சேதம் பற்றிய ஆவணத்தை புதுப்பிக்கப்பட்டு பராமரிக்கப்படவில்லை	சேதம் பற்றிய ஆவணத்தை புதுப்பிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது.
02.	உள்ளகக் கணக்காய்வு விசாரணைகளுக்கு ஒரு மாதத்திற்குள் பதில்களை சமர்ப்பிக்கவில்லை.	பிரச்சினைக்குறிய 2020 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் பதில்களை பெற்றுக் கொள்வதற்கான முன்னேற்றம் ஒன்று 2021ஆம் ஆண்டில் காட்டப்பட்டுள்ளது. தற்போது, காலதாமதத்தைத் தவிர்க்க உள்ளக ரீதியில் செயற்பாடொன்று அமைக்கப்பட்டுள்ளது.
03.	நி.பி. 134 (2) இற்கு இணங்க உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர்நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை	உள்ளகக் கணக்காய்வு விசாரணைகளில் அனைத்துப் பிரதிகளும் கணக்காய்வாளர் நாயகம் (அஞசல்) இற்கு முக்வைக்கப்;பட்டுள்ளது,
04.	வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பின் போது கண்டறியப்பட்ட மேலதிகங்கள் மற்றும் குறைபாடுகள் தொடர்பான பரிந்துரைகள் குறிப்பிட்டகாலத்திற்குள் செயல்படுத்தப்படவில்லை.	01. தபால் திணைக்களத்தின் கீழ் 653 தபால் அலுவலகங்கள், 3410 உப தபால் அலுவலகங்கள் மற்றும் 80 நிருவாக அலுவலகங்கள் பொருட்கள் கண்காணிப்பு வருடாந்தம் இடம்பெறுகின்றது. 02. அவ்வாறே, வருடாந்த பொருட்கள் கண்காணிப்பு மற்றும் வருடாந்த களஞ்சியவறை கண்காணிப்பின் பின்னர் ஏற்படுகின்ற அதிகரிப்பு மற்றும் குறைபாடுகள் வருடாந்தம் அறியப்பட்டுள்ளது. 03. இந்தத் திணைக்களம் நாடளாவிய ரீதியில் பரந்து கிடப்பதால், தற்போது கணிசமான எண்ணிக்கையிலான பணியாளர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. கோவிட் 19 தொற்றின் காரணமாக அச்சுறுத்தல் காரணமாகவும், பல பிராந்திய அலுவலகங்களின் செயற்பாடுகளை நாளாந்தம் பேண இயலாமை காரணமாகவும் வருடாந்த பொருட்கள் கண்காணிப்பு அதிகரிப்பு மற்றும் குறைபாடுகள் தொடர்பான பரிந்துரைகள் போன்றே ஏனைய பரிந்துரைகள் குறிப்பிட்ட குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் நடைமுறைப்படுத்த இயலவில்லை. 04. 2022ஆம் ஆண்டின் வருடாந்த பொருட்கள் - களஞ்சியவரை கணக்காணிப்பு நடவடிக்கைகள் ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரிகளுக்கு அதிகரிப்பு மற்றும் குறைபாடுகளை விசேடமாக அறிக்கைப் படுத்துமாறு எழுத்துமூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக வருடாந்தம் பொருட்கள் - களஞ்சியவரை கண்காணிப்பு நடவடிக்கைகள் மற்றும் அகற்றும் நடவடிக்கைகளை உரிய காலக்கெடுவுக்குள் மேற்கொள்ளுமாறு அனைத்துப் பிரதேச

		அலுவலகங்களுக்கும் ஆலோசனைக் கடிதம் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. 05. அதன்படி, எதிர்காலத்தில் தீர்மானிக்கப்படும் காலக்கெடுவுக்குள் தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தாழ்மையுடன் அறியத் தருகின்றேன்.
05.	ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்காக தினசரி ஓட்டுநர் பதிவுகள் மற்றும் மாதாந்த அறிக்கைகளை கணக்காய்வாளர் நாயகத்திற்கு தெரிவிக்காதது	கொரோனா தொற்று நிலைமை எமதுக நாட்டுக்கும் முகங்கொடுக்க நேர்ந்த கால வரையரையினுள் தபால் திணைக்கள ஆளணியினர் அந்தத் தொற்றுக்கு அடிக்கடி ஆளாகியமையினால் ஆளணியின் பற்றாக்குறை காரணமாக பலத்த சிரமத்துடன், தபால் செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருந்தது. இங்கு ஆளணியினரின் பற்றாக்குறையுடன் ஏற்பட்ட சிரமங்களின் அடிப்படையில் 2020ஆம் ஆண்டுக்கு உரியதான ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்காக தினசரி ஓட்டுநர் பதிவுகள் மற்றும் மாதாந்த அறிக்கைகளை கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்குவதற்கு முடியாமல் போனது. 2021ஆம் ஆண்டு முதல் ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்காக தினசரி ஓட்டுநர் பதிவுகள் மற்றும் காலாண்டு அறிக்கைகள் உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பதை தயவு செய்து தெரிவிக்கவும்.
06.	வாகனமொன்று உருவாக்கப்பட்டு 6 மாதத்திற்கும் குறைவான காலத்தினுள் பயணப்படுத்தப்படாமல் இருத்தல்.	திணைக்களத்தில் தற்போது வரை பயன்படுத்தாத நிலையில் வாகனம் ஒன்று உள்ளது. 16ஸ்ரீ 6905 இலக்கம் கொண்ட அந்த வாகனம் நீக்குவதற்காக அதன் பதிவுச் சான்றிதழ் உள்ளடங்களான விசேட நிபந்தனைகள் இரத்துச் செய்து கொள்ள வேண்டியுள்ளதுடன், அதற்காக இந்த விசேட நிபந்தனைகளை நீக்குதல் தொடர்பாக வர்த்தகம் மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களத்திடமிருந்து ஆலோசனை கேட்டகப்படுள்ளது.
07.	பகுப்பாய்வு செய்த ஆண்டில் அல்லது அதற்கு முன்னரான வருடங்களிலிருந்து நிலவி வந்த செயற்படாத வங்கிக் கணக்குகள் தீர்க்கப்படாமல் இருந்தமை	இந்தக் கணக்கினை மூடுவதற்கு திரைசேறியின் செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு மீண்டுமொருமுறை மாதிரிப் படிவம் அமைக்கப்பட்டு 2021.12.01ஆந் திகதி வழங்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பாக திரைசேறித் திணைக்களத்தினை விசாரித்த போது விரைவில் கணக்கினை மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்
08.	வங்கி ஒப்பீட்டுக் கூற்றுக்களில் இருந்து தெளிவாவது, பொருந்தக் கூடியதாக இருந்த நிலுவை தொடர்பாக நி.பி. இற்கு இணங்க ஒரு மாத்திற்குள் தீர்க்கப்படாதிருந்தமை	இதுவரை உரிய நிலுவைகள் கண்டறியப்பட்டு பொருத்தப்பாடுகள் செய்யப்பட்டு சரி செய்யப்பட்டுள்ளது.
09.	வருடத்திற்கும் மேலான காலம் முதல் நிலவி வருகின்ற நிலுவைக் கடன் மீதி காணப்படுவது	2022.12.31ஆந் திகதிக்கு நிலவிய வருடத்திற்கு மேலதிகமான நிலுவைக் கடன் மீதியான ரூபா. 38,336,519.80 இலிருந்து ரூபா. 2,275,444.80 இதுவரை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், ரூபா. 1,358,906.31 தொடர்ந்தும் அறிவிட்டுக் கொள்ள முடியாமல் ரூபா. 25,000.00 இற்கும் குறைவான நிலுவை கடன் மீதி அரச நிதிச் சுற்று நிருப இலக்கம் 01/2020 இற்கு இணங்க 2022.12.23ஆந் திகதிக்கு வெட்டி நீக்கிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

		வருடத்திற்கு மேலதிகமான தொடர்ந்தும் நிலவுகின்ற நிலுவைக் கடன் மீதியினை அறவிட்டுக் கொள்வதற்கு உரியதான பல்வேறு வழிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன. பணிதடுப்பு செய்யப்பட்ட அதிகாரிகள் மற்றும் சேவையினை விட்டுச் சென்ற அதிகாரிகளில் கண்டறியப்பட்ட அதிகாரிகளுக்கு கடிதம் மூலம் கடனை செலுத்துமாறு குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஒரு சில அதிகாரிகள் இதற்காக எவ்வித பிரதிபலிப்பும் காட்டாததுடன், ஒரு சில அதிகாரிகள் பகுதிகளாக பணத்தைச் செலுத்தி வருகின்றனர். தொடர்ந்தும் கடிதம் கிடைக்கப்பெற்று எவ்வித பதிலும் கூறாத கடனாளிகளின் சாட்சியாளர்கள் தொடர்பில் தகவல்கள் நிருவாகச் செயலாளர் (ஆளணி) இனால் பெற்றுக் கொண்டு சாட்சியாளர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு பதில்கள் எதுவும் கிடைக்காகத, தபால் திணைக்களத்தில் தற்போதும் சேவையில் உள்ள சாட்சியாளர்களின் சம்பளத்திலிருந்து மாதாந்தம் உரிய கடன் தொகை நிலுவையினை அறவிட்டுக் கொள்ளப்பட்டு வருகின்றது. சாட்சியாளர்கள் இல்லாத கடனாளிகளின் சொத்துக்கள் தொடர்பில் உறுதிப்பாடு உரிய பிரதேச செயலகத்தினால் பெற்றுக் கொள்வதற்கு உரியதான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறே, சில கடன் மீதி தொடர்பில் சட்டவியல் நடவடிக்கைள் எடுப்பதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
10.	அனுமதிக்கப்பட்ட வரையரையைத் தாண்டி ஆளணியினரை ஆட்சேர்ப்புச் செய்திருந்தமை	தபால் திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட பிரதித் தபால்மா அதிபர் பதவிகள் 13 ஆகும். அதில் 04 இலங்கை நிருவாக சேவைப் பதவியின் மூலம் நிரப்பப்பட்டுள்ளது. அதன்படி, திணைக்களப் பதவிகள் 09 ஆகும். திணைக்களத்திலிருந்து பிரதித் தபால்மா அதிபர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படுவது நிரைவேற்று II தரத்தில் தேவையான தகைமைகளை பூர்த்தி செய்தததன் பின்னராகும். அரச நிருவாக சுற்றரிக்கை 6/2006 இணங்க அமைக்கப்பட்ட ஆட்சேர்ப்பு விதிமுறைகளுக:கு இணங்க தர உயர்வு முறைகளுக்கு ஏற்ப பிரதித் தபால்மா அதிபர் பதவிக்காக 02 அதிகாரிகள் தகைமை பெற்றிருந்தனர். வெற்றிட பதவிகள் 02 இற்காக அரச நிருவாக சேவைக்கு தகைமை பெற்ற அதிகாரிகள் விண்ணப்பிக்காததன் காரணத்தினால் அந்தப் பதவிகள் 02 இற்காக திணைக்களத்தில் தகைமை பெற்ற அதிகாரிளை இணைத்துக் கொள்ள வேண்டி ஏற்பட்டது. இதன் பிரகாரம் பதவிகள் எண்ணிக்கை 11 ஆகியுள்ளது என்பதை சுட்டிக் காட்டுகின்றேன். தபால் சேவை அதிகாரி Iதரத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினர் 876 ஆகும். அரச நிருவாக சுற்றரிக்கை இற்கு இணங்க அமைக்கப்பட்ட ஆட்சேர்பு விதிமுறைகளுக்கு இணங்க தர உயர்வு வழமுறைகின் அடிப்படையில் Iஆம் தரத்திற்காக தகைமை பெற்ற அனைத்து அதிகாரிகளுக்கும் பதவி உயர்வு வழங்க வேண்டி உள்ளதால் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிச் சபை தாண்டி பதவி உயர்வுகளை வழங்கியுள்ளது.

இரண்டாம் பகுதி : 55.00		
தொடர். இலக்கம்	**குழுவினால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்**	**குறைபாடுகளை சரிசெய்வதற்கு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள்மற்றும் தற்போதைய நிலை**
01.	நிறுவனத்தின் நடாத்திச் செல்லப்படுகின்ற இணையத் தளம் மூலம் பொது மக்களுக்கு முறைப்பாடு அல்லது பாராட்டுக்கள் என்பவற்றை பதிவதற்காக சந்தர்ப்பம் வழங்கப்படாதிருந்தமை.	இந்த வசதிகள் அடங்களாக புதிய இணையத் தளமொன்றினை ஆரம்பிப்பது 2023 செயற்பாட்டுத் திட்டத்திற்கு உள்வாங்கப்பட்டுள்ளது.
02.	குடிமக்கள்/ சேவை பயனாளிகள் சாசனம் சரியாக தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படவில்லை நிறுவனத்தின் குடிமக்கள்/சேவை பயனாளிகளின் சாசனம் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு அமைப்பை உருவாக்காமல் இருந்தமை	குடிமக்கள் சேவை பயனாளிகள் சாசனம் தயாரித்தல் 2023 செயற்பாட்டுத் திட்டத்தல் உள்வாங்கப்பட்டுள்ளது. செயற்பாட்டு அலுவலகம், கணக்கு அலுவலகம் மற்றும் நிருவாக அலுவலகம் போன்ற 03 பிரிவிற்கான பாரிய அலுவல்கள் ஒவ்வொரு சேவை முறையின் கீழ் நிரைவேற்றப்படுகின்றது. எனவே, அந்த அனைத்து குறிப்பிட்ட அனைத்து பிரிவுகளும் உள்ளடங்கும் வன்னம் வெவ்வேறாக சேவைப் பயனாளிகள் சாசனம் அமைக்கப்பட வேண்டும். நடைமுறை பிரச்சினைகயாக அமைந்திருப்பது, அதிக ஆளணியினர் குறைபாடு காரணமாக சேவைப் பயனாளிகள் சாசனம் அமைக்கப்பட்டாலும், உரிய காலத்தினுள் உரிய அலுவல்களை முடித்துக் கொள்ளவது பிரச்சினைக்குரிய விடயமாகும். எவ்வாறாயினும் சேவைப் பயனாளிகள் சாசனம் தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் அதனை பிரபல்யப்படுத்தி செயற்படுத்த முடிவது ஆளணிச் சபை குறைபாட்டை நிவர்த்தி செய்ததன் பின்னராகும். இல்லாவிட்டால் சேவைப் பயனாளிகளின் அதிருப்த்திக்கு அது காரணமாக அமைகின்றது. ஆளணியினரை பூரணப்படுத்தி இதனை செயற்படுத்தியதன் பின்னர் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு உரியவாறு மேற்கொள்ளலாம்.
03.	அரச நிருவாக ஏற்புகளின் படி உரியவாறு அமைக்கப்பட்ட மனித வள திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	முறையான மனித வள திட்டமொன்று இதுவரை அமைக்கப்படவில்லை. இருப்பினும், மனித வளத் திட்டத்திற்கு உரியதான அனைத்து விடயங்கள் வெவ்வேறு பிரிவுகளினால் மேற்கொள்ளப்பட்டு ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு, பயிற்சி மற்றும் அபிவிருத்தி, சேவைக் கணிப்பீடு மற்றும் ஏனைய மனித வள முகாமைத்துவ விடயங்களுக்குரியதான பிரிவுத் தலைவர்களின் பொறுப்புக்களின் கீழ் மேற்கொள்ளப்படும். அதற்காக இந்தத் திணைக்களத்தின் நிருவாகப் பிரிவு, பயிற்சிப் பிரிவு, பரீட்சைப் பிரிவு போன்ற பிரிவுகளினால் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, இந்தப் பிரிவுகளுக்கு உரியதான விடயங்களை வரிசைப்படுத்தி அறிவியல் முறைக்கு இணங்க மனித வள திட்டமொன்றை அமைத்தல் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக அரச நிருவாக அமைச்சின் பங்களிப்பினை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
04.	மொத்த ஆளணியினரும் உள்ளடங் களாக செயல் முன்னேற்றுகை ஒப்பந்தத்தை அமைத்து கையொப்பமிடாமல் இருந்தமை.	தலைமையக அடிப்படையில் செயல் முன்னேற்றுகை ஒப்பந்தம் அமைத்து கைச்சாத்திடப்பட்ட போதிலும் மாகாண அடிப்படையில் அது சரியான முறையில் நிகழ்த்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டு;ள்ளது. உரிய ஒப்பந்தப் பத்திரம் பிரதேச அலுவலகங்களுக்கு

		வழங்கப்பட்டிருந்த போதிலும், அதில் வினவப்பட்டிருந்த ஒரு சில விடயங்கள் தெளிவின்மை காரணமாகவும், சிக்கல் காரணமாக மேற்சொன்ன ஒப்பந்தம் கைச்சாத்திடுவது தொடர்ந்தும் தாமதமாகியுள்ளது. இக் காரணங்களின் காரணமாக அந்த ஒப்பந்தப் பத்திரங்கள் சரியாக பூரணப்படுத்துவதற்காக ஆளணியினருக்குத் தேவையான அறிவினை வழங்குவதற்காக பல்பேறு பயிற்சிகள் வழங்குவது அவசியம் என கண்டறியப்பட்டுள்ளதுடன், அதற்காக பயிற்சிப் பிரிவினால் விசேட பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளன. இதற்காக தற்போது இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
05.	திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்பு -களிலிருந்து வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50% க்கும் குறைவான அளவில் காணப்பட்டது	2020 இல் நிலவிய கோவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக திட்டமிட்டபடி பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்துவதற்கு முடியாமல் போனது. கோவிட் 19 தொற்றின் தீவிரம் குறைந்த பின்னர் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளின் அளவு முறையாக மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பிரகாரம், இதுவரை திட்டமிடலுக்கு இணங்க சாதாரணமாக பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்படுகின்றன.

R. V. A. L. Rajapaksha
Chief Accountant
Department of Posts
Colombo 10